

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் – தொடக்க கால கழகப் பாடகரும், கழகத்திற்காக பலமுறை சிறை சென்ற கழகப் போராளியும் சென்னை கிழக்கு மாவட்ட இலக்கிய அணி துணைத் தலைவருமான மறைந்த எம்.ஆர்.வெங்கடேசன் அவர்களின் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினார்.

உலகத் திருக்குறள் கூட்டமைப்பு சார்பில் – ஒன்றிய அரசை வலியுறுத்தி

# வள்ளுவர் கோட்டம் அருகில் பெருந்திரள் கோரிக்கை முழக்கம்!

### ஆர்.எஸ். பாரதி – டி.கே.எஸ். இளங்கோவன் – வா.மு.சேதுராமன் பங்கேற்பு!

சென்னை, நவ.12

உலகத் திருக்குறள் கூட்டமைப்பு நடத்தும் பெருந்திரள் கோரிக்கை முழக்கம் சென்னை நுங்கம்பாக்கம் - வள்ளுவர் கோட்டம் அருகில் இன்று (12.11.2024 - செவ்வாய்கிழமை) காலை 10 மணியளவில் நடைபெறுகிறது.

இதில் செம்மொழித் தமிழை ஒன்றிய அரசின் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும். திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும். சென்னை - மதுரை உயர்நீதிமன்றங்களில் தமிழை வழக்காடும் மொழியாக அறிவிக்க வேண்டும் என இந்திய அரசை வலியுறுத்தி கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன.

இந்நிகழ்ச்சிக்கு தங்க ஆதிலிங்கம் தலைமையும், நந்திவரம் பா.சம்பத்குமார், பெ. அகத்தியன் பசுபதி, கோ.வெங்கடேசன், து.இரமேசு, பிச்சி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நோ.ஆல்பி வரவேற்புரையும், பாவலர் மு.இராமச்சந்திரன் துவக்க உரையும் ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்வை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தொடங்கி வைத்து சிறப்புரையாற்று கிறார்.

கழக செய்தித்தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், ஆர்.சுதா எம்.பி. , ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. , டாக்டர் வி.ஜி.சந்தோஷம், வெ.சேகர், சே.பாலு, பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன், டாக்டர் டி.கே.சத்தியசீலன், டி.ஆர்.ஆர்.செங்குட்டுவன், ஆர்.இராதாகிருஷ்ணன், கு. இராமமூர்த்தி, தமிழ் இயலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இதில் உலகத் திருக்குறள் கூட்டமைப்பு தலைமைத் துறை இயக்குநர்கள், மாவட்ட நிர்வாகிகள், அனைத்து வழக்கறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், சமூக நல ஆர்வலர்கள், மகளிர், மாணவர்கள் பங்கேற்கின்றனர்.

கோபி. இ.ராமு நன்றி கூறுகிறார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை! எஸ்.முரளி தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ‘என் உயிரினும் மேலான’ 8வது தொடர் பேச்சரங்கம்!

### திருச்சி சிவா எம்.பி. – இளம் பேச்சாளர்கள் தமிழ்வாணன் – மதன்குமார் சிறப்புரை!

சென்னை, நவ.12-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் “என் உயிரினும் மேலான” பேச்சு போட்டியில் பட்டை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் பங்கேற்கும் 8வது தொடர் பேச்சரங்கம். கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி என்.சிவா, எம்.பி, இளம் பேச்சாளர்கள் தமிழ்வாணன், மதன்குமார் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி சார்பில், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் “என் உயிரினும் மேலான” என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பேச்சு போட்டியில் பட்டைத் தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் பங்கேற்கும் கருத்தியல் எட்டாவது தொடர் பேச்சரங்கம், 13.11.2024, மாலை: 6.00 மணியளவில் சென்னை, பாரிமுனை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், தயாநிதி மாறன் ஆகியோர் முன்னிலையில், துறைமுகம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி தலைமையில், கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி, அவர்களும், இளம் பேச்சாளர்கள் தமிழ்வாணன் அவர்கள் “நல்லதை மட்டும் செய்வோம்” என்ற தலைப்பிலும், மதன்குமார் அவர்கள் “முதல்வரால் இது முதன்மை மாநிலம் - புதல்வரால் இது இன்னும் பேர் பெறும்” என்ற தலைப்பிலும் உரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன், எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, தமிழன் பிரசன்னா, ப.ரங்கநாதன் Ex. MLA., இரா.நரேந்திரன், டாக்டர். பி.எம்.யாழினி, எஸ்.இராஜசேகர், எம்.விஜயகுமார், ப.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், இசட் ஆசாத் எம்.சி, என். பி.எம்.சேக் அப்துல்லா, எம். இப்ராஹிம்கனி, இரா.கலைச்செல்வி, பா.ஜெகதீஷ், எல். சம்பத்குமார், பி.விஜயகுமார், பா.பிரதீப்கு மார், எம்.வினாயகம், வெ.பரிமளம் எம்.சி, ராஜேஷ்ஜெயின் எம்.சி, எல். நவின் எம்.சி, துறைமுகம் மேற்கு பகுதி கழக நிர்வாகிகள்: மே.ஜனார்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம. முத்துகுமார். துறைமுகம் கிழக்கு பகதி கழக நிர்வாகி கள்: ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.பெ.ஜெயராமன். துறைமுகம் மேற்கு வட்ட கழக செலாளர்கள்: மா.ஜெய்சங்கர், ஆர். ரவிச்சந்திரன், பா.கதிரவன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை. துறைமுகம் கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: த.கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார், எல்.சத்தியநாராயண்ன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன் மற்றும் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

இப்பேச்சரங்கத்தில் வட்ட கழக செயலாளர்கள்: டி.சதீஷ் குமார், சேப்பாக்கம் வே. பா.பிரபாகரன் நன்றி தெரிவிப்பார்கள்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனைப்படி திருவேற்காடு நகர திமுக சார்பில் 1 முதல் 18 வார்டு வரை இருக்கும் பி.எல்.ஏ.2 பாக முகவர்கள் பி.எல்.சி. பாக உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நகரக் கழகச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது இதில் தேர்தல் பணிகள் குறித்தும் வாக்காளர் சரிபார்த்த பணிகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது இதில் தொகுதி பார்வையாளர் நிவேதா ஜெசிக்கா, நகர வாக்காளர் சரிபார்ப்பு பணிகளின் பொறுப்பாளர் த.எத்திராஜ், வழக்கறிஞர் ராஜ்குமார் தினேஷ் குமார், நிர்வாகிகள் நடராஜன், ஜெ.சரவணன், ஏ.இ.செல்வதுரை, பி.பாண்டுரங்கன், வட்டக் கழகச் செயலாளர்கள் ஏ.சி.தெய்வசிகாமணி, பு.பரிசமுத்து, பி.உமாபதி, பி.வி.கே.கண்ணன், மா.காந்தி, பா.பன்னீர்செல்வம், பிரதானம், க.சாது, என்.பி.ஜெகன், ரங்கதுரை, டி.குமார், கெஜா, துரைகோபால், கே.பி.எஸ்.சுதாகர், பொன்.மனோகரன், தி.வி.இளங்கோவன், ஜி.சத்தியகிரி, நூம்பல் ஆசைத்தம்பி, என்.ராஜ், பேபிஸ்ரீ, அமேலேஸ்வரி, ரஜினி, நாராயணன், நரேஷ், எம்.சுரேஷ், உள்பட பலர் கலந்து கொண்டார்கள்



சைதை மேற்கு பகுதி 139 – 139 அ ஒருங்கிணைந்த வட்டக் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர்– அமைச்சர் மா.சுப்பிரமணியன். அறிவுறுத்தலின்படி 139 அ வட்டச் செயலாளர் சை.மு.சேகர் தலைமையில் களக்காடி.எல்லப்பன், வி.பி.ஜானகிராமன், அட்கோ.கமலநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைப்பெற்றது. பகுதிச் செயலாளர் – மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர். எம். ஸ்ரீதரன்.எம்.சி, தொகுதி பொறுப்பாளர். . பரிதி இளம் சுருதி ஆகியோர் ஆலோசனை வழங்கி பேசினர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் சார்பில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளான

# ‘இளைஞர்களின் எழுச்சி நாள்’ சிறப்பு தொடர் பொதுக் கூட்டங்கள் - நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் அறிவிப்பு!



துணை முதல்வரும், கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை இளைஞர்களின் எழுச்சி நாளை சிறப்பாக கொண்டாடும் வகையில், தலைமை கழக மூத்த பேச்சாளர்கள் மற்றும் என் உயிரினும் மேலான என்னும் பேச்சு போட்டி மூலம், கழக இளைஞர் அணி செயலாளரால் கழகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட இளம் பேச்சாளர்களைக் கொண்டு சிறப்பு தொடர் பொதுக் கூட்டங்கள் மற்றும் நலத்திட்டங்கள் வரும் நவம்பர் 28 ஆம் தேதி முதல் டிசம்பர் 9 ஆம் தேதி வரை, கீழ்கண்ட அட்டவணையின்படி நடைபெறவுள்ளது.

| வ எண் | தேதி | நேரம் | பேச்சாளர்கள் | இடம் | நிர்வாகம் / அணிகள் | செயலாளர்கள் / அமைப்பாளர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 28/11/2024 | மாலை 6 மணி | மதிமாறன் கோகுல் | பட்டாபிராம் | ஆவடி மேற்கு பகுதி | பொன் விஜயன் |
| 2 | 28/11/2024 | மாலை 6 மணி | தாயகம் கவி சாய் ரித்திக் சக்திவேல் | தாமரைப்பாக்கம் | எல்லாபுரம் மத்திய ஒன்றியம் | தங்கம் முரளி |
| 3 | 29/11/2024 | மாலை 6 மணி | திண்டுக்கல் ஐ லியோனி செல்வி.எம் ரோஜா | திருவேற்காடு | திருவேற்காடு நகரம் | என் இ கே மூர்த்தி |
| 4 | 29/11/2024 | மாலை 6 மணி | ஈரோடு இறைவன் க.செல்வமணி | காக்களூர் | திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் | ஆர் ஜெயசீலன் |
| 5 | 29/11/2024 | மாலை 6 மணி | சைதை சாதிக் ம.மோகநிதி | ஆவடி | மாவட்ட வழக்கறிஞர் அணி | பெ வினோத் |
| 6 | 30/11/2024 | மாலை 6 மணி | கரூர் முரளி சி கவின் குமார் | ஈக்காடு | திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் | புஜ்ஜி ராமகிருஷ்ணன் |
| 7 | 30/11/2024 | மாலை 6 மணி | ஈரோடு இறைவன் செ.ஜோதி | திருமுல்லை வாயில் | ஆவடி கிழக்கு பகுதி | பேபி வி சேகர் |
| 8 | 01/12/2024 | மாலை 6 மணி | தூத்துக்குடி சரத் பாலா க முல்லை வேந்தன் | வேப்பம்பட்டு | திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் | சே. பிரேம் ஆனந்த் |
| 9 | 01/12/2024 | மாலை 6 மணி | தாயகம் கவி நா அருண் | பருத்திப்பட்டு | ஆவடி தெற்கு பகுதி | கோ ராஜேந்திரன் |
| 10 | 02/12/2024 | மாலை 6 மணி | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி செல்வி.கா ராஜராஜேஸ்வரி | திருநின்றவூர் | திருநின்றவூர் நகரம் | தி.வை.ரவி |
| 11 | 02/12/2024 | மாலை 6 மணி | செல்வி.சேலம் சுஜாதா மாறன் | பூவிருந்தவல்லி | மாவட்ட மகளிர் அணி | திருமதி.சங்கீதா சீனிவாசன் |
| 12 | 03/12/2024 | மாலை 6 மணி | தூத்துக்குடி சரத் பாலா வீ.தினேஷ் | காட்டுப்பாக்கம் | பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் | ப.ச.கமலேஷ் |
| 13 | 03/12/2024 | மாலை 6 மணி | திருவெற்றியூர் கருணாநிதி உ.யாசர் அராபத் | ஆவடி, நடுக்குத்தகை | மாவட்ட இளைஞர் அணி | சுரேஷ் குமார் |
| 14 | 04/12/2024 | மாலை 6 மணி | செல்வி.மதிவதனி விருகை சந்தோஷ் ஜெய் | குமணன்சாவடி | பூவிருந்தவல்லி நகரம் | ஜி ஆர் திருமலை |
| 15 | 04/12/2024 | மாலை 6 மணி | உத்திராபதி செல்வி.ரூ கீர்த்தனா | ஆவடி | மருத்துவர் அணி | ஜி. ராஜேஷ் குமார் |
| 16 | 05/12/2024 | மாலை 6 மணி | மதிமாறன் செல்வி.பா ஸ்ரீலேகா | குத்தம்பாக்கம் | பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் | டி.தேசிங்கு |
| 17 | 05/12/2024 | மாலை 6 மணி | திருவெற்றியூர் கருணாநிதி வி கு ஷியாமி | திருவேற்காடு | மாவட்ட வர்த்தகர் அணி | எ ஜெ பவுல் |
| 18 | 06/12/2024 | மாலை 6 மணி | பொன்னேரி சிவா கா.மு.ஜான் அ தா டெக்சின் ரோமேரியோ | பூவிருந்தவல்லி | மாவட்ட பொறியாளர் அணி | எம்.மோகன் |
| 19 | 06/12/2024 | மாலை 6 மணி | செல்வி.மதிவதனி ரிஷி சந்தோஷ் | ஆவடி | மாவட்ட தொழிலாளர் அணி | ஒ.ஆர். நாகூர் கனி |
| 20 | 07/12/2024 | மாலை 6 மணி | பவானி கண்ணன் திராவிட மணி மா பூபதி | ஆவடி, HVF ரோடு | ஆவடி வடக்கு பகுதி | நாராயண பிரசாத் |
| 21 | 07/12/2024 | மாலை 6 மணி | செல்வி சேலம் சுஜாதா சாகுல் அமீது கான் | திருமழிசை | திருமழிசை பேரூர் | தி. வே. முனுசாமி |
| 22 | 08/12/2024 | மாலை 6 மணி | ஆலந்தூர் ஒப்பில்லாமணி செல்வி.க.ஷேவிதா | ஆவடி | மாநகர இளைஞர் அணி | துர்கா பிரசாத் |
| 23 | 08/12/2024 | மாலை 6 மணி | பவானி கண்ணன் ச.பேரரசன் | பூவிருந்தவல்லி, நசரத்பேட்டை | கலை இலக்கிய அணி | எ.ஜி.ரவி |
| 24 | 09/12/2024 | மாலை 6 மணி | ஈரோடு இளைய கோபால் தே.சிலம்பரசன் | ஆவடி | மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி | ஆர்.பிரவின் குமார் |
| 25 | 09/12/2024 | மாலை 6 மணி | சைதை சாதிக் செல்வி.க.பார்கவி | காக்களூர் | மாவட்ட மாணவர் அணி | வே.தியாக ராஜன் |

அமைச்சர் **ஆவடி சா.மு.நாசர்**
செயலாளர் - திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

தமிழ்நாட்டில்.

# ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, நவ. 12 –

தலைமைச் செயலாளர் என்.முருகானந்தம் நேற்று (11–11– 2024) வெளியிட்டுள்ள உத்தரவில், ‘சுற்றுலாத்துறை ஆணையராகவும், மேலாண்மை இயக்குநருமான சமயமூர்த்தி மனித வள மேலாண்மைத்துறை செயலாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். தேசிய ஊரக திட்ட இயக்குநராக உள்ள ஷில்பா பிரபாகர் சுற்றுலாத் துறை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். தலைமைத் தேர்தல் அதிகாரியாக இருந்த சத்யபிரத சாகு, கால்நடை, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர்கள் நலத்துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சமக்ர சிக்ஷா திட்ட இயக்குநர் ஆர்த்தி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அலுவலக துணை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை செயலாளராக அதுல் ஆனந்த் நியமிக்கப்பட்டுள்ளார். தேசிய சுகாதார திட்ட இயக்குநராக அருண் தம்புராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தி.மு.க. சட்டத்துறை வடக்கு மண்டலம்1, சட்டத்துறை சார்பில் சென்னை,திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, மாவட்ட,மாநகர வழக்கறிஞர் அணியின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சென்னை அன்பகத்தில் மண்டல பொறுப்பாளர்கள் ஜெ.பச்சையப்பன், கே.சந்துரு ஆகியோர் முன்னிலையில் சட்டத்துறைத் தலைவர் ஆர்.விடுதலை, சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.உடன் சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். ஆர்.இரவிச்சந்திரன், கே.ஜே..சரவணன், சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வே.தேவேந்திரன் உட்பட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.